**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 18.11.2025**
**OS. No. 151/2022**
**வழக்கு சாட்சி PW.1–சிவா , த/பெ.ஜெகதீசன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>2 முதல் 5 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1) என்னுடைய சொத்தை 1ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தால் அதை ரத்து செய்யும்படி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தமிழ்நாடு போக்குவரத்து துறையில் ஓட்டுநராக பணி புரிந்து வருகிறேன். தாவா சொத்தின் ச.எண்.239/1, அதன் விஸ்தீரணம் 4.34 ஏக்கர் ஆகும். 1ம் பிரதிவாதி என்னுடைய உறவினரா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியாக இந்த வழக்கில் யாரை சேர்த்துள்ளேன் என்றால் BDO அலுவலக ஆணையரை சேர்த்துள்ளேன். மற்ற பிரதிவாதிகளாக பதிவாளர்களை சேர்த்துள்ளேன். 2ம் பிரதிவாதியை பொறுத்து என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் 2ம் பிரதிவாதி பெயரில் மேற்கண்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்ததால் அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன்.

2) மற்ற பிரதிவாதிகள் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். நான் தாவா சொத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் குடியுள்ளேன். தாவா சொத்து முடிவில் தார் ரோடு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தார்ரோடு பஞ்சாயத்தில் போடப்பட்டதாகும், என் நிலத்திலும் போடப்பட்டுள்ளது. அதற்கு நான் தான பத்திரமும் எழுதி கொடுத்துள்ளேன். மேற்படி ரோடு மல்லியகுந்தத்திலிருந்து என்னுடைய நிலத்தை தாண்டி சுமார் 50 மீட்டர் வரை சென்று முடிவடைகிறது. அந்த தார் ரோடு சுமார் 10 வருடங்களுக்கு முன்பு போடப்பட்டது. நான் எழுதி கொடுத்த தான பத்திரமும் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு எழுதி கொடுத்தேன். என் நிலத்தை தாண்டி ஊஞ்சகாடு, பச்சபாளி விநாயகர் கோவில், கச்சராயனூர் ஆகியவை உள்ளது என்றால் சரிதான்.

3) 2006 க்கு முன்னராக சுமார் 17 வருடங்களாக தார் ரோடு அமைந்துள்ள இடத்தின் வழியாக தான் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் ரத்து செய்யுமாறு கேட்டுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் மேலும் 24 நபர்கள் தங்களது பட்டா

நிலங்களை பொறுத்து அரசுக்கு தானமாக கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், 1ம் பிரதிவாதி மட்டும் என்னுடைய நிலத்தையும் சேர்த்து தானம் எழுதி கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதிக்கும், எனக்கும் தனிப்பட்ட பிரச்சனை உள்ளது என்றால் இந்த வழக்கு பிரச்சனையை தவிர வேறு இல்லை. 1ம் பிரதிவாதி தானம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு 2022 ல் தான் தெரியவந்தது.

4) நான் எங்கள் காட்டிற்கு அறுவடை சமயத்தில் மட்டும் சென்று வருவதால் எனக்கு அந்த விவரங்கள் தெரியவில்லை. என்னுடைய நிலத்தை தவிர்த்து மற்ற இடங்களில் தான் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய நிலம் விவசாய நிலமாகத்தான் உள்ளது. மேற்படி தார் சாலை கிழக்கு மேற்காக செல்கிறது. அரசு தார் சாலை அமைப்பதற்கு முன்பு அந்த இடத்தை சீர் செய்து, மண் போட்டு, ஜல்லி போட்டு தார் சாலை அமைப்பார்கள் என்றால் சரிதான். தார் சாலையானது மல்லிகுந்தம் பகுதியையிலும், ஊஞ்சகாடு, பச்சபாளி விநாயகர் கோவில், கச்சராயனூர் ஆகிய பகுதிகளை இணைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கச்சராயனூர் செல்வதற்கு வேறு வழி உள்ளது, அந்த தார் சாலையானது என்னுடைய நிலத்தை தாண்டியவுடன் முடிவடைகிறது. அந்த தார் சாலை என் நிலத்துடன் முடிவடைவதை காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையரை நியமிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். இது தொடர்பாக மனு தாக்கல் செய்வதற்கும் நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். 2 முதல் 5 பிரதிவாதிகள் பொதுநலனுக்காக தான் செயல்படுவார்கள் என்றும், தனிப்பட்ட முறையில் செயல்படமாட்டார்கள் என்றால் சரிதான், ஆனால் என்னை அவ்வாறு செய்துவிட்டார்கள்.

5) 2ம் பிரதிவாதியை பொறுத்தவரையில் ஆவணத்தின் அடிப்படையில் தீர்மானம் வைத்து, நிலத்தை அளந்து, பொதுமக்கள் நலனுக்காக சாலை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆவணம் எழுதிய விவரம் எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டு, வழக்கில் தார் சாலை அமைக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த காலத்தில் என் நிலத்திற்கு செல்வேன் என்றே சொல்லவில்லை என்றும், அறுவடை காலத்தில் மட்டும் செல்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், நான் என் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள்

பத்திர பதிவு சட்டப்படி இரு தரப்பினர்களும் நேரில் ஆஜராகி, உரிய கட்டணம் செலுத்தி, உரிய ஆவணங்கள் சமர்பிக்கும் பட்சத்தில் பதிவு மேற்கொள்வார்கள் என்றால் சரிதான். ஆனால் எனக்குஅவ்வாறு செய்யவில்லை. இந்த வழக்கிலும் அவர்கள் பத்திர பதிவு சட்டப்படி தான் செயல்பட்டுள்ளனர் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) பதிவு மேற்கொண்டது தெரிந்தவுடன் பத்திர பதிவு அலுவலகத்தில் ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் நேரில் சென்று சொன்னேன், இதற்கு முன்பு இருந்தவர்கள் செய்து விட்டதாக சொல்லிவிட்டதால் வில்லங்க சான்றிதழ்போட்டு பார்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். இது குறித்து காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால் அரசு அதிகாரிகள் என்பதால் கொடுக்கவில்லை. சட்டம் அனைவருக்கும் சமமானது என்பதால் உண்மையாகவே அவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எந்த வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் என்னுடைய சொத்து என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையேயுள்ள பிரச்சனை சம்மந்தமாகத்தான் இந்த வழக்கு என்றும், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இந்த வழக்கு அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.